**ELECTION / URGENT**

NO.5/11/1/1/RCS/PLG/H1/2016/
GOVERMENT OF PONDICHERRY
CO-OPEARTIVE DEPERMENT

***

PUDUCHERRY, the 04-03-2016

**CIRCULAR**

SUB: Election to the Legislative Assembly 2016 - Code of Conduct instruction to the Co-operative societies – issued.

REF: Office Memorandum No. E.100/MCC-GI/2016-308 and E-108(1)/2016-309 dated 18.2.2016 received from the Chief Electoral Officer, O/o the Chief Electoral Officer, Puducherry.

***********

The Election Commission of India will be announcing the schedule for the General Election Puducherry Legislative Assembly, 2016 very shortly. In connection with the said election, the following instructions are issued to the co-operative societies for strict observance:

a) No notice/advertisement of any nature of any political party, candidate or others shall be affixed or written on any building owned, leased, rented or under the control of the co-operative societies. If anything is found in contravention, the management of the society concerned shall lodge a complaint to the nearest police station under section 34-B (VII) of the police (Puducherry amendment) Act, 1966. In case if any notice/advertisement is affixed or written in contravention after issue of this circular, the management of the society concerned shall take appropriate action immediately against the erring employee (Watchman etc.) and inform the same to this office immediately

b) No employee of any co-operative society shall involve himself in any activity, in any manner, in connection with the election either directly or indirectly.

c) No vehicle or furniture of the society shall be utilized for any purpose of the election, except for the officers /officials authorized by the Election Department.

d) No new employee shall be engaged, recruited or appointed, either on hourly or daily rated or temporary basis. No confirmation, promotion or enhancement of pay scales shall be effected to any employee of the society from the date of notification of the said election till the date of declaration of results.

...2/-

e) The staff engaged hitherto with Ministers / MLAs / other political functionaries should be called back immediately.

2. The above instruction shall remain in force till the date of declaration of results of the said election.

3. The President /Administrator of the society shall forward an assurance letter (in the proforma enclosed ) to this office immediately.

4. Any contravention to the above instruction will lead to initiation of legal action as per law against the management of the societies.

04/03/16

**(Dr. A.S. SIVAKUMAR)**
**REGISTRAR OF CO-OPERATIVE SOCIETIES**

To

The President / Administrator / Special Officer / Managing Director of all co-operative societies Mahe and Yanam region.

Copy to:-

1. The Chief Electoral Officer, Puducherry.
2. P.S. to Secretary (Co-operation).
3. PA to RCS
4. The Deputy Registrar of Co-op. Societies, Mahe.
5. The Co-operative Officer, Yanam .
6. Key file

**ELECTION / URGENT**

**Proforma**

From

The President/Administrator/Special Officer/Managing Director,

...........................................................................

.........................................................................

(Address of the society)

Mahe/Yanam.

To

The Registrar of Cooperative Societies,
V.V.P. Nagar, Thattanchavady Post,
Puducherry – 605 009.

Sir,

Sub: Legislative Assembly Election 2016 - Adherence of Code of Conduct – Assurance Submitted.

Ref: Circular No. 5/11/1/1/RCS/Plg/H1/2016/ dated .3.2016

*************

In pursuance of the reference cited, we hereby assure and undertake to ensure that :

a) No notice/advertisement of any nature of any political party, candidate or others is or will be affixed or written on any buildings of our society.
b) No employee of our society shall involve himself in any activity, in any manner, connected with the said election, either directly or indirectly.
c) No vehicle or furniture of our society shall be utilised for any purpose of the said election, except for the Officers/Officials authorised by the Election Department and
d) No new staff/employee shall be engaged, recruited or appointed, in our society either on hourly or daily rated or temporary basis. No confirmation, promotion or enhancement of pay scales shall be effected to any staff/employees of our society from the date of notification of the said election till the date of declaration of results.

2. Further, we are to state that, undertaking have been obtained from the staff/employees of our society, ensuring their abstainness from the Puducherry Legislative Assembly Elections 2016.

Yours faithfully,

Date:

Place:

**தேர்தல் / அவசரம்**

எண். No.5/11/1/1/பதிவாளர்/திட்டம்/எம்/2016/
புதுச்சேரி அரசு
கூட்டுறவுத்துறை
***

புதுச்சேரி, நாள் : 04-03-2016

## சுற்றறிக்கை

பொருள் : சட்டமன்ற தேர்தல் 2016 — மாதிரி நடத்தை விதிகள் நடைமுறைப்படுத்த அறிவித்தல் - தொடர்பாக.

பார்வைக்காக : தலைமை தேர்தல் அதிகாரி, புதுச்சேரி அவர்களின் 18.2.2016 தேதியிட்ட அலுவலக குறிப்பாணை எண். E.100/MCC-GI/2016-308 மற்றும் E-108(1)/2016-309.

***

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் சட்டமன்ற உறுப்பினரைத் தேர்வு செய்வது தொடர்பான தேர்தல் 2016-ஐ தேர்தல் கமிஷன் வெகு விரைவில் அறிவிக்கவுள்ளது. இது சம்மந்தமாக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளைப் பின்பற்றும்படி அறிவுறுத்தப்படுகிறது.

அ) சங்கத்திற்கு சொந்தமான கட்டடங்கள் மற்றும் சங்க கட்டுப்பாட்டில் உள்ள கட்டடங்களில் எந்தவிதமான அறிக்கைகளோ விளம்பரங்களோ அரசியல் கட்சிகள் / வேட்பாளர்கள் / தனி நபர் மூலமாக ஒட்டியோ / எழுதியோ இருத்தல் கூடாது. அப்படி ஏதாவது எழுதியோ / வரைந்திருந்தாலோ இதை 1966 ஆண்டு காவல் (புதுச்சேரி திருத்தம்) சட்ட எண் 34-B (VII) ன்படி அருகில் உள்ள காவல் நிலையத்தில் முறையீடு (complaint) செய்தல் வேண்டும். இச்சுற்றறிக்கை கிடைத்த பின்பு சங்கக் கட்டடங்களில் விளம்பரம் ஏதும் செய்யப்பட்டால் சங்கத்தின் காவலாளி அல்லது சம்மந்தப்பட்ட ஊழியர்கள் மீது நடவடிக்கைகள் எடுத்து அதன் விவரத்தை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும்.

ஆ) மேலும், சங்க ஊழியர்கள் எவரும் தேர்தல் பிரச்சாரங்களிலோ மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளிலோ (தேர்தலில் வாக்களிப்பது தவிர) நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபடக் கூடாது.

...2/-

இ) சங்கத்திற்கு சொந்தமான வாகனங்கள் மற்றும் தளவாட பொருட்களைத் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தக் கூடாது (அரசின் தேர்தல் துறைக்குக் கொடுப்பது தவிர).

ஈ) சங்கத்தில் தினக்கூலி / தற்காலிக அடிப்படையிலோ அல்லது எந்த முறையிலும் ஊழியர்களைப் பணியில் அமர்த்துவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், சங்க ஊழியர்களுக்கு பணி நிரந்தரம் மற்றும் பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்றவற்றிற்கும் தேர்தல் அறிவித்த நாளிலிருந்து தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் வரை தடைவிதிக்கப்பட்டுள்ளது.

உ) அமைச்சர்கள் / சட்டமன்ற உறுப்பினர்கள் / பிற அரசியல் பிரமுகர்களிடம் பணிபுரியும் ஊழியர்கள் அனைவரையும் உடன் சங்கப்பணிக்கு திருப்பி அழைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

2. இவ்வுத்தரவு தேர்தல் முடிவுகள் அறிவிக்கும் வரை அமல்படுத்தப்பட வேண்டும் என்பதையும் அறிவுறுத்தப்படுகிறது.

3. மேலும், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தை உடனடியாக பூர்த்தி செய்து பதிவாளர் அலுவலகத்திற்கு உடன் அனுப்பும்படி கோரப்படுகிறது.

4. மேற்படி நடவடிக்கைகளைப் பின்பற்றத் தவறினால், தேர்தல் விதித் தொடர்பாக எடுக்கக்கூடிய தண்டனைகளுக்குச் சங்க நிர்வாகம் முழு பொறுப்பேற்க நேரிடும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

04/3

(Dr. A.S. சிவகுமார்)
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்

இணைப்பு : மேற்கூறியவாறு.

பெறுநர்:
தலைவர் / நிர்வாகி / தனி அதிகாரி / மேலாண் இயக்குநர்
அனைத்து கூட்டுறவு சங்கங்கள், புதுச்சேரி & காரைக்கால்.

நகல்:

1. தலைமை தேர்தல் அதிகாரி, புதுச்சேரி.
2. செயலாளர் (கூட்டுறவு), தலைமைச் செயலகம், புதுச்சேரி.
3. பதிவாளர் அவர்களின் நேர்முக உதிவியாளர்
4. பால்வள அபிவிருத்தி அதிகாரி / துணைப்பதிவாளர் (கைத்தறி / நுகர்வோர் / கடன் / வீட்டுவசதி), கூட்டுறவுத் துறை, புதுச்சேரி.
5. துணைப்பதிவாளர், காரைக்கால்.
6. இருப்பு கோப்பு.

**தேர்தல் / அவசரம்**

அனுப்புநர்:

தலைவர் / நிர்வாகி / தனி அதிகாரி / மேலாண் இயக்குநர்

------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------

பெறுநர்:

பதிவாளர் அவர்கள்,

கூட்டுறவுத்துறை,

புதுச்சேரி ___ 605 009.

ஐயா,

எங்கள் சங்கத்திற்குரிய கட்டிடங்களில் எந்தவிதமான அரசியல் சம்பந்தமாக விளம்பரங்கள் ஏதும் ஒட்டப்படவில்லை என்றும், மேலும் வருகின்ற தேர்தல் முடியும் வரை அவ்வாறு ஒட்டப்படாமல் கண்காணிப்போம் என்றும் சங்கத்திற்குச் சொந்தமான கட்டுப்பாட்டில் உள்ள வாகனங்களையோ, தளவாட பொருட்களையோ தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளுக்கு (அரசின் தேர்தல் துறைக்குத் தவிர) பிற வகையில் ஈடுபடுத்தமாட்டோம் என்று உறுதி கூறுகிறோம்.

மேலும், எங்கள் சங்க ஊழியர்களை தேர்தல் தொடர்பான பிரச்சாரங்களில் ஈடுபடக் கூடாது என்று அறிவுறுத்தப்பட்டு உறுதிமொழி பெறப்பட்டுள்ளது.

மேலும், எங்கள் சங்கத்தில் எந்த விதத்திலும் ஊழியர்கள் நியமனம் செய்யப்படமாட்டாது எனவும் பதவி உயர்வு, சம்பள உயர்வு அளிக்கப்படமாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு,

தலைவர் / நிர்வாகி / தனி அதிகாரி / மேலாண் இயக்குநர்